|b09291 56arnolF (English)

|c09291_000_56arnol.xml (Task 179333)

|v1

ஞாயிற்றுக்கிழமை மதியக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிற்றுக்கிழமை மதியக் கூட்டம்

|v4

*அக்டோபர் 3, 2010*

|v5

எனது பெயரைக் கொண்டு நீ என்ன செய்திருக்கிறாய்?

|v6

கீழ்ப்படிதல்

|v7

கட்டளைகள்

|v8

இயேசு கிறிஸ்து

|v9

பொது மாநாடு

|v10

*எனது பெயரைக் கொண்டு நீ என்ன செய்திருக்கிறாய்?*

|v11

|மூப்பர் மெர்வின் பி. அர்னால்ட்

|v12

எழுபதின்மர்

|v13

*அவருடைய பெயரைக் கொண்டு நாம் என்ன செய்தோம் என நாம் ஒவ்வொருவரும் ஒருநாள் நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்துவிற்கு கணக்கு கொடுக்க வேண்டும்.*

|v14

தலைவர் ஜார்ஜ் ஆல்பர்ட் ஸ்மித் இளைஞனாயிருந்தபோது, அவருடைய இறந்துபோன தாத்தா ஜார்ஜ் ஏ. ஸ்மித் அவருடைய சொப்பனத்தில் தோன்றி, எனது பெயரைக் கொண்டு நீ என்ன செய்திருக்கிறாய் என நான் அறியவேண்டும் என கேட்டார். “உங்களது பெயரைக் கொண்டு நீங்கள் வெட்கப்படும்படி நான் ஒருபோதும் ஒன்றும் செய்யவில்லை”1 என தலைவர் ஸ்மித் பதிலளித்தார்.

|v15

ஒவ்வொரு வாரமும் நாம் திருவிருந்தில் பங்குகொள்ளும் பொழுது, கிறிஸ்துவின் நாமத்தை நம்மேல் எடுத்துக் கொள்வோம் எனவும், அவரை எப்பொழுதும் நினைவுகூருவோம் எனவும் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வோம் எனவும் நாம் உடன்படிக்கையும் வாக்குத்தத்தமும் செய்கிறோம். அவ்வாறு நாம் செய்ய மனமுள்ளவர்களாயிருந்தால், அவருடைய ஆவியானவர் நம்முடன் எப்போதும் இருப்பார் என்ற மிக அற்புதமான ஆசீர்வாதத்தை பெறுவோம் என வாக்குத்தத்தமளிக்கப்பட்டிருக்கிறோம்.2

|v16

தன்னுடைய தாத்தாவின் பெயரைக் கொண்டு என்ன செய்தார் என்பதற்கு ஜா

*ர்ஜ் ஆல்பர்ட் ஸ்மித் அவருடைய தாத்தாவிற்கு கணக்குக் கொடுக்க வேண்டி யிருந்ததுபோல, அவருடைய பெயரைக் கொண்டு நாம் என்ன செய்தோம் என நாம் ஒவ்வொருவரும் ஒருநாள் நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்துவிற்கு கணக்கு கொடுக்க வேண்டும்.*

|v17

*நற்பெயரைக் கொண்டுள்ளதன் முக்கியத்துவத்தைப்பற்றி நீதிமொழிகளில் சொல்லப்பட்டுள்ளது, "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது, பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்"3 எனவும், "நீதிமானுடைய பெயர் புகழ் பெற்று விளங்கும்!"4 என அங்கு, நாம் வாசிக்கிறோம்.*

|v18

*இந்த வசனங்களையும் நற்பெயரைக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் நான் சிந்திக்கும்போது, என்னுடைய நான்கு சகோதரர்களுக்கும், இரண்டு சகோதரிகளுக்கும், எனக்கும் எனது பெற்றோர் விட்டுச்சென்ற  நற்பெயரையும் பாரம்பரியத்தையும்பற்றிய ஏராளமான நினைவுகள் என் மனதில் வந்தது. எனது பெற்றோர் உலக ஆஸ்தியைப் பெற்றிருக்கவில்லை, அவர்கள் வெள்ளியையோ பொன்னையோ வைத்திருக்கவில்லை. இரண்டு படுக்கையறைகளையும், ஒரு குளியலறையும், என்னுடைய சகோதரிகள் உறங்க ஒரு மூடப்பட்ட பின்வராந்தாவுமுள்ள ஒரு வீட்டில் நாங்கள் ஒன்பதுபேரும் வாழ்ந்தோம். என்னுடைய பெற்றோர் மரித்தபின் அவர்களுடைய மிகக் குறைவான பூலோக உடமைகளை பிரிப்பதற்காக நானும் எனது சகோதரர்களும் சகோதரிகளும் கூடினோம். என்னுடைய அம்மா உடைகளையும், உபயோகித்த சில அறையணிகளையும் மற்றும் சில சொந்த பொருட்களையும் விட்டுச் சென்றிருந்தார்கள். என்னுடைய அப்பா சில மரவேலை செய்வதற்குரிய ஆயுதங்களையும், சில பழைய வேட்டையாடும் துப்பாக்கிகளையும் மற்றும் சிறு பொருட்களையும் விட்டுச் சென்றிருந்தார். ஒரு எளிமையான வீடும், ஒரு சிறிய சேமிப்பு கணக்கும் மட்டுமே பண மதிப்புடையதாக இருந்தது.*

|v19

வெள்ளியையும் பொன்னையும் விட அதிக விலையேறப்பெற்ற சிலவற்றை அ
வர்கள் எங்களுக்காக விட்டுச் சென்றதை அறிந்து நாங்கள் யாவரும் சேர்ந்து
வெளிப்படையாக அழுது நன்றி தெரிவித்தோம், அவர்கள் எங்களுக்காக தங்க
ளது அன்பையும் நேரத்தையும் கொடுத்திருந்தார்கள், அவர்கள் சுவிசேஷத்தின்
உண்மையைப்பற்றி அடிக்கடி சாட்சி கூறியிருக்கிறார்கள். அதை அவர்களது
விலைமதிப்புமிக்க குறிப்பிதழிலிருந்து நாங்கள் இப்போது வாசித்து தெரிந்து
கொண்டோம். அதிகமான வார்த்தைகளினால் அல்ல ஆனால் தங்களது எடுத்
துக்காட்டுகளினால் கடினமாக உழைப்பதற்கும் நேர்மையாக இருப்பதற்கும்
முழு தசமபாகம் செலுத்துவதற்கும் எங்களுக்கு போதித்தார்கள். நாங்கள் கல்
வி கற்பதற்கும், ஊழியம் செய்வதற்கும், மிக முக்கியமாக நித்திய துணையைக்
கண்டு பிடிப்பதற்கும், ஆலயத் திருமணம் செய்வதற்கும் மற்றும் முடிவுபரியந்
தம் நிலைத்து நிற்பதற்கும் அவர்கள் எங்களுக்குள் வாஞ்சையை ஏற்படுத்தக்
காரணமாயிருந்தார்கள். உண்மையாகவே, நாங்கள் எப்பொழுதும் நன்றியுட
னிருக்க நற்பெயரையும், பாரம்பரியத்தையும் அவர்கள் எங்களுக்காக விட்டுச்
சென்றிருந்தார்கள்.

|v20

அன்பிற்குரிய தீர்க்கதரிசி ஏலாமான் மற்றும் அவனது மனைவிக்கு இரு குமார
ர்கள் பிறந்தபொழுது லேகி மற்றும் நெப்பி என அவர்களுக்குப் பெயர் வைத்
தார்கள், அவர்களுடைய பிறப்புக்கு 600 வருடங்களுக்கு முன் இந்த பூமியில்
வாழ்ந்த அவர்களுடைய முன்னோர்களின் பெயரை ஏன் வைத்துள்ளோம் என
ஏலாமான் அவனுடைய குமாரர்களுக்குச் சொன்னான். அவன் சொன்னான்,

|v21

“இதோ என் குமாரரே,---நம்முடைய முதற்பெற்றோருடைய நாமங்களை உ
ங்களுக்குச் சூட்டியிருக்கிறேன் (லேகி மற்றும் நெப்பி). இதை நான் செய்தது
ஏனெனில், நீங்கள் உங்கள் நாமங்களை நினைக்கும்போது அவர்களை நீங்கள்
நினைக்க வேண்டும். அவர்களை நீங்கள் நினைவுகூரும்போதும் அவர்களுடை
ய கிரியைகளை நீங்கள் நினைவு கூர்ந்து அவர்கள் நல்லோர் என்று சொல்லப்ப
ட்டிருப்பதையும் எழுதப்பட்டிருப்பதையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

|v22

ஆதலால் என் குமாரரே, அவர்களைக் குறித்து சொல்லப்பட்டும், எழுதப்பட்டும் இருப்பதைப்போல உங்களைப்பற்றி சொல்லப்படவும் எழுதப்படவும் நீங்கள் நன்மையானதையே செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

|v23

அதனிமித்தம் நீங்கள் நித்திய ஜீவன் என்கிற அந்த விலையுயர்ந்த ஈவைப்பெறுவீர்கள்.”5

|v24

சகோதர சகோதரிகளே 600 வருடங்களுக்குப் பிறகு எவ்வாறு நமது பெயர்கள் நினைவுகூரப்படும்?

|v25

கிறிஸ்துவின் பெயரை எவ்வாறு நம்மீது தரித்துக்கொண்டு, அதன் மூலம் நம் நற்பெயரைக் காத்துக் கொள்வது குறித்து பேசும்போது மரோனி கற்பித்தான்,

|v26

“மறுபடியும் நீங்கள் கிறிஸ்துவிடம் வந்து, ஒவ்வொரு நல்ல வரத்தையும் பெற்றுக்கொண்டு, பொல்லாத வரத்தையும் அசுத்தமானதையும் தொடாதிருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

|v27

“ஆம் கிறிஸ்துவினிடத்தில் வந்து அவரில் பூரணப்பட்டிருங்கள், எல்லா அசுத்தங்களிலிருந்தும் உங்களை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள்.”6

|v28

*வாலிபர்களின் பெலனுக்காக* என்ற உணர்த்தப்பட்ட சிற்றேட்டில் நாம் வாசிக்கிறோம், “தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், தேர்ந்தெடுத்தவற்றுக்கான ஒழுக்கப் பொறுப்புக்களை தாங்கியுள்ள, தேவனால் கொடுக்கப்பட்ட நித்திய கொள்

கையாகும்....தேர்ந்தெடுக்க நமக்கு நாமே சுதந்திரம் எடுத்துக்கொள்ளும்போது, நமது செயல்களுக்கான விளைவுகளைத் தேர்ந்தெடுக்க நமக்கு சுதந்திரமில்லை. ஒன்றை (நாம்) தேர்ந்தெடுக்கும்போது (நாம்) அந்த தேர்ந்தெடுத்தவற்றின் விளைவுகளைப் பெறுகிறோம்.”7

|v29

நானும் என் அன்பு மனைவி டிவோன்னாவும் திருமணம் செய்து கொண்ட கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, நாம் தேர்ந்தெடுக்க சுதந்திரம் பெற்றுள்ளோம்; ஆனால் நமது செயல்களின் விளைவுகளை தேர்ந்தெடுக்க சுதந்திரம் இல்லை, என்ற இந்த முக்கிய கொள்கையை அவள் எப்படி கற்றாள் என்ற கதையை என்னுடன் பகிர்ந்து கொண்டாள். எனது மகள் ஷெல்லியின் உதவியுடன் சகோதரி அர்னால்டின் அனுபவத்தை சொல்ல விரும்புகிறேன்.

|v30

எனக்கு 15 வயதாயிருந்தபோது அப்போதெல்லாம் அநேக விதிகளும் கட்டளைகளும் இருப்பதாக அடிக்கடி நினைத்தேன். இத்தனை கட்டுப்பாடுகளுடன் ஒரு சாதாரண, வேடிக்கையை விரும்பும் குமரப் பருவ இளைஞன் வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என நான் நினைக்கவில்லை. அதற்கும் மேலாக, என் அப்பாவின் பண்ணையில் பல மணி நேரங்கள் வேலை செய்தது, நான் என் நண்பர்களுடன் இருக்கும் நேரத்தைக் குறைத்தது.

|v31

“இந்த குறிப்பிட்ட கோடைகாலத்தில் எனது வேலைகளில் ஒன்று, மலைப் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் வேலியை உடைத்துக்கொண்டு கோதுமை வயலில் நுழைந்துவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதாகும். வளர்ந்து கொண்டிருக்கிற கோதுமையை மேய்கிற பசு, வயிறு ஊதி மூச்சுத்திணறி மரணமடையலாம். குறிப்பாக ஒரு பசு வேலியின் ஊடே தலையை நுழைத்து எப்போதும் முயற்சி செய்தது. ஒருநாள் காலை, வேலி ஓரமாக நான் குதிரையில் சவாரி செய்து பசுக்களை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, அப்பசு வேலியை உடைத்துக்கொண்டு கோதுமை வயலில் நுழைந்திருந்ததைக் க

ண்டேன். அது ஏற்கனவே நன்றாக ஊதிப்போய் அநேகமாக ஒரு பலூனைப் போலக் காணப்பட்டதால், அப்பசு நீண்ட நேரம் கோதுமையை தின்றிருக்க லாமென நான் நினைத்தேன். “முட்டாள் பசுவே, உன்னைப் பாதுகாக்கவே வேலி இருந்தது, ஆனாலும் நீ அதை உடைத்து உன் உயிரே அபாயத்திற்குள் ளாகும் அளவுக்கு அதிக கோதுமையை தின்றிருக்கிறாய்” என நான் நினைத் தேன்.

|v32

அப்பாவைக் கூப்பிட நான் பண்ணை வீட்டுக்கு விரைந்தேன். எனினும் நாங்க ள் திரும்பி வந்தபோது அது தரையில் செத்துக்கிடந்ததைக் கண்டேன். பசுவை இழந்ததால் நான் கவலை அடைந்தேன். மேய்வதற்கு அழகிய மலைப் புல் வெளியும், ஆபத்தான கோதுமையிலிருந்து பாதுகாக்க வேலியும் நாங்கள் கொ டுத்திருந்திருந்தோம். ஆனாலும் அது முட்டாள்தனமாக வேலியை உடைத்து தன் மரணத்தை ஏற்படுத்திக்கொண்டது.

|v33

“வேலியின் பணியைப்பற்றி நான் சிந்தித்தபோது, கட்டளைகளையும் என் பெ ற்றோரின் சட்டங்களையும் போல அது ஒரு பாதுகாப்பு என உணர்ந்தேன். க ட்டளைகளும் சட்டங்களும் என் நன்மைக்காகவே. கட்டளைகளுக்குக் கீழ்ப் படிவது என்னை சரீர மற்றும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து காக்க முடியும் எ ன உணர்ந்தேன். அந்த தெளிவு என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக ஆ னது.”

|v34

நமது அன்பான ஞானமிக்க பாசமுள்ள பரலோகப் பிதா நமக்கு கட்டளைக ளை கொடுத்திருக்கிறார். சத்துரு நம்மை நம்ப வைக்க நினைப்பதுபோல நம் மை கட்டுப்படுத்த அல்ல, ஆனால் லேகி மற்றும் நெப்பி பெற்றுக் கொண்டது போல நமது எதிர்கால சந்ததிகளிடம் நமது நற்பெயரையும் நமது பாரம்பரிய த்தையும் காத்துக்கொள்ளவும் நமது வாழ்க்கையை ஆசீர்வதிக்கவுமே. தன்னு டைய தேர்ந்தெடுத்தலின் விளைவை அந்தப் பசு பெற்றுக் கொண்டதுபோல

*அக்கரையிலுள்ள புல் பசுமையானதல்ல, அல்லது ஒருபோதும் அப்படி ஆகாது, ஏனெனில் துன்மார்க்கம் ஒருபோதும் மகிழ்ச்சியானதல்ல என நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.”8* இந்த வாழ்க்கை முடிவடையும் போது நாம் தேர்ந்தெடுத்தவற்றின் விளைவுகளை நாம் ஒவ்வொருவரும் பெறுவோம், கட்டளைகள் தெளிவானவை. அவை பாதுகாப்பவை, அவை கட்டுப்படுத்துபவை அல்ல, மேலும் கீழ்ப்படிதலின் அற்புதமான ஆசீர்வாதங்களோ எண்ணிலடங்காதவை.

|v35

நாம் அனைவரும் தவறு செய்வோம் என நமது பரலோகப் பிதா அறிவார். பாவநிவர்த்திக்காக நான் மிகவும் நன்றியுடையவனாயிருக்கிறேன். அது நாம் மனந்திரும்புவதற்கும், மீண்டும் நம்முடைய இரட்சகருடன் ஒன்றாயிருப்பதற்கு தேவையானவற்றை சரி செய்வதற்கும், மன்னிப்பின் இன்ப சமாதானத்தை உணர்வதற்கும் நம்மை அனுமதிக்கிறது.

|v36

நமது இரட்சகர் தினமும் நமது பெயர்களை சுத்திகரிக்கவும் அவருடைய சமூகத்திற்கு திரும்பவும் நம்மை அழைக்கிறார். அவரது ஊக்குவித்தல் அன்பும் மென்மையும் நிறைந்தது. “நான் அவரது வார்த்தைகளை வாசிக்கும்போது இரட்சகர் தழுவிக் கொள்வதை என்னுடன் கற்பனை செய்து பாருங்கள், “நீங்கள் எல்லோரும் இப்பொழுதாவது என்னிடத்தில் திரும்பி உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி நான் உங்களை சுகப்படுத்தும்படியாக மனமாற மாட்டீர்களோ” ***9***

|v37

தங்களது நற்பெயர்களின் நிமித்தம், எப்பொழுதும் நினைவுகூரத்தக்கவர்களான எனது “பெற்றோர்” எனக்குக் கொடுத்த அதே சவாலை உங்கள் ஒவ்வொருவருக்கும் இன்று நான் கொடுக்க விரும்புகிறேன். நீங்கள் செயல்படுவதற்கு முன்னால், உங்கள் அருகில் இரட்சகர் நின்று கொண்டு இருப்பதாக கற்பனை செய்துகொண்டு, “அவர் அங்கு இருக்கிறார் என அறிந்துள்ளபடியால், அதை

*நான் நினைப்பேனா, அதை நான் சொல்லுவேனா, அல்லது அதை நான் செய் வேனா?" என உங்களையே கேளுங்கள். ஏனெனில் நிச்சயமாக அவர் அங்கு இ ருக்கிறார். தீர்க்கதரிசி என நான் சாட்சி கூறுகிற நமது அன்புக்குரிய தலைவர் தாமஸ் எஸ். மான்சன், நமது கர்த்தரும் இரட்சகருமானவரைப்பற்றி பேசும் போது, பின்வரும் வசனத்தை அடிக்கடி குறிப்பிடுகிறார்: அவர் நமது முகத்து க்கு முன்பாக போவார். அவர் நமது வலது மற்றும் இடது பாரிசத்தில் இருப் பார். அவரது ஆவி நமது இருதயங்களில் இருக்கும்.10*

|v38

*அவரது நாமத்தைக் கொண்டு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று அறிக்கை யிட நமது நேச இரட்சகர் முன்பாக நாம் நிற்கிற அந்த மகிமையான நாளில் நாம் இவ்வாறு சொல்ல முடியுமா? "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்."11, நான் உம து நாமத்தை கனம் பண்ணியிருக்கிறேன். இயேசுவே கிறிஸ்து என நான் சாட்சி யளிக்கிறேன், நான் ஜீவிக்கும்படியாக அவர் மரித்தார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆமென்.*

|v39

குறிப்புகள்

|v40

1.

|v41

*Presidents of the Church Student Manual* (Church Educational System manual, 2003), 134.

|v42

2.

|v43

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 20:77 பார்க்கவும்*

|v44

3.

|v45

*நீதிமொழிகள் 22:1*

|v46

4.

|v47

*நீதிமொழிகள் 10:7*

|v48

5.

|v49

*ஏலாமான் 5:6--8;* emphasis added.

|v50

6.

|v51

*மரோனி 10:30, 32* emphasis added.

|v52

7.

|v53

*For the Strength of Youth* (booklet, 2001), 4.

|v54

8.

|v55

*ஆல்மா 41:10*

|v56

9.

|v57

*3 நெப்பி 9:13*

|v58

10.

|v59

*கோட்பாடும் மற்றும் உடன்படிக்கைகளும் 84:88*

|v60

11.

|v61

*2 தீமோத்தேயு 4:7*

|v62

*லியஹோனா*

|v63

*நவம்பர் 2010*